KALAIKESARI

# கலைகேசரி

• CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 1 ISSUE : 8 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 116 / News / 2010



'மனம்' உள்ள
மடுமாதா

தடைசெய்யப்பட்ட
நகரம்

மூவேந்தர் வணங்கிய
பட்டீசுவரர்

| | | |
|---|---|---|
| INDIA..............INR 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE...EUR 7.00 |

www.kalaikesari.com / AUGUST 2010

ISSN 2012-6824

# யாழ்ப்பாணப் பண்பாட்டு உருவாக்கத்தில் கந்தரோடை

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் தொல்லியற் சின்னங்கள், தொல்லியல் மையங்கள் போன்றன பல்வேறு காரணங்களுக்காக முதன்மைப்படுத்தப்பட்டு வருவதனைக் காணலாம். நல்லூர் இராசதானி, யாழ்ப்பாணக் கோட்டை, நாற்றிசைக் கோவில்கள், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உள்ளிட்ட பல கோவில்கள், சங்கிலியன் தோப்பு, யமுனை ஏரி, யாழ்ப்பாணக் கோட்டை, நெடுந்தீவுக் கோட்டை, புறாக் கூடு போன்றன யாழ்ப்பாண வரலாற்றின், யாழ்ப்பாணப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியை எடுத்துக்காட்டும் நினைவுச் சின்னங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. தொல்லியல் மையங்களைப் பொறுத்தவரை ஆனைக்கோட்டை, பூநகரி, கந்தரோடை, காரைநகர், வல்லிபுரம், சாட்டி முதலிய பல இடங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

யாழ்ப்பாணத்தின் தொன்மை, பாரம்பரியம், பண்பாட்டு உருவாக்கம் பற்றிய பல்வேறு வினாக்களுக்கு சில விளக்கங்களைக் கண்டு கொள்வதற்கு கந்தரோடைத் தொல்லியல் மையம் வாய்ப்பாக அமைகின்றது. இன்றும் தொல்லியல் சான்றுகள் அங்கிருந்து கிடைக்கப் பெறுவதனால் தொல்லியலாளரின் கவனத்தை பெருமளவுக்கு ஈர்த்த இடமாகக் கந்தரோடை விளங்குகின்றது. இலங்கையின் வரலாற்றில் இடைக்கற்காலத்தையடுத்து பெருங்கற்காலம் என்ற காலப்பகுதி இருந்தமைக்கான தொல்பொருள் எச்சங்கள் கண்டு கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை இப்பண்பாட்டுக்காலம் நிலவிய காலப்பகுதி கி.மு.30,000 என நிறுவப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இக்காலத்திற்குரிய தொல்லியல் சின்னங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

இடைக்கற்காலப் பண்பாட்டினைத் தொடர்ந்து வரும் காலகட்டமாகப் பெருங்கற்காலம் (கி.மு.800) நோக்கப் படுகின்றது. யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் முதன் முதலாக அடையாளம் காணப்படும் பெருங்கற்காலப் பண்பாடு கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகர், சாட்டி போன்ற இடங்களில் நிலவி இருந்தமைக்குச் சான்றுகள் காணப்படுகின்றன. கலாநிதி பொ. இரகுபதி யாழ்ப்பாணத்திலுள்ள பழைய சில குடியிருப்புக்களை அடையாளம் கண்டு 'Early Settlements in Jaffna' என்ற நூலை எழுதியுள்ளார். பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்துடனேயே இலங்கையின் ஆரம்பகால வரலாற்றுக் காலம் தோன்றுவதற்கான ஆக்ககாலம் ஆரம்பமாகின்றது. இலங்கையில் நிலவிய இப்பண்பாட்டுக்கும் தென்னிந்தியாவில்



**அட்டைப்பட விளக்கம்:**

வட இலங்கையின் முதலாவது தலைநகராக அடையாளம் காணப்பட்டுள்ள கந்தரோடை முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியல் களமாக விளங்குகிறது. இந்து பௌத்த செல்வாக்கு இங்கு காணப்படுவதுடன் புராதனகால சின்னங்களைக் கொண்டிருப்பதனாலும், கந்தரோடைக்கு இத்தகு சிறப்புக் கிடைக்கப்பெற்றுள்ளது. கந்தரோடையின் பழமைய பெயராக கதிரமலை குறிப்பிடப்படுகின்றது. தென்னிந்தியா, இலங்கை முதலான நாடுகளில் பெருங்கற்காலப் பண்பாடு அந்நாடுகளின் ஆக்ககாலத்தைச் சுட்டி நிற்பது போல யாழ்ப்பாணத்தின் ஆக்ககாலத்தை கந்தரோடை சுட்டி நிற்கின்றது. தென்னாசியாவில் புராதனகால வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட இடமாக கந்தரோடை விளங்கியதை சான்றுகள் தெரியப்படுத்துகின்றன.

நிலவிய இப்பண்பாட்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் காணப்பட்டதை தொல்லியல், மானிடவியல், மொழியியல், சமூகவியல் அடிப்படையில் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் எடுத்துக் காட்டியுள்ளார். யாழ்ப்பாணத்திலும் இத்தகைய பின்னணியிலேயே பெருங்கற்கால பண்பாட்டின் அடிப்படையில் பண்பாட்டு உருவாக்கம் நிகழ்ந்துள்ளதென்பது தொல்லியல் சார் அறிஞரது கருத்தாகவுள்ளது.

கந்தரோடையில் பண்பாட்டின் அடித்தளமான நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றன. நகரமயமாக்கம் என்றால் ஒரு மையத்திலே குடியிருப்புக்கள் நெருக்கமாக ஏற்பட்டு அக்குடியிருப்புக்களுக்கு மத்தியில் வேறுபட்ட பல இன, மத பண்பாடு ஒன்றோடொன்று கலப்பதன் மூலம் அம்மையத்திலே முன்னேற்றகரமான நிலையான குடியிருப்புக்கள், நிலையான பொருளாதாரம், கலைகளின் தோற்றம், வெளிநாட்டுத் தொடர்புகள், எழுத்துக்களின் பயன்பாடு போன்ற நாகரிக அம்சங்களுடன் வாழ்தல் ஆகும். உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பு இப்பண்பாட்டின் உருவாக்கத்தில் பிரதான பங்கு வகித்தமை குறிப்பிடத்தக்கதாகும். கந்தரோடையைப் பொறுத்தவரை நாட்டின் ஏனைய பிராந்தியங்களைப்போல் அதன் அயல்நாட்டுத் தொடர்பு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஏற்பட்டதற்கான சான்றுகள் பரவலாகக் கிடைத்துள்ளன. இப்பண்பாட்டில் கிடைத்துள்ள சிலவகை மட்பாண்டங்கள், கல்வகைகள், மணிகள் போன்றன தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மாந்தை, கந்தரோடை போன்ற இடங்களில் கிடைத்த கல்மணிகளுக்கும், தமிழ்நாட்டில் அரிக்கமேடு, அழகன்குளம், காரைக்காடு ஆகிய இடங்களில் கிடைத்த மணிகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள் குறிப்பிடத்தக்கதென பொப்பே என்ற ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றார். கிரேக்க உரோமச் சான்றுகள் பலவும் இங்கு பெருமளவில் கிடைத்துள்ளமையையும் காணமுடிகின்றது. கார்னிலியன் கல்லிலமைந்த முத்திரை, 'தாத்தாவினுடைய பாத்திரம்' என்பதனைக் குறிக்கும் பிராமி எழுத்துப் பொறித்த உரோம ரௌலட் மட்பாண்டம், உரோம நாணயங்கள் கார்னிலியன், அகேற், லபிஸ், அமெதிஸ்தற், கண்ணாடி போன்ற மூலப்பொருட்களினாலான மணிகள் என்பன முக்கியம் பெறுகின்றன. விமலா பேக்லே இங்கு கிடைத்த ரௌலட் மட்பாண்டங்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் இவற்றில் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டாலும் இது தனித்தன்மை வாய்ந்தவை எனக் கூறி அரிக்கமேட்டில் கிடைத்த ரோம மட்பாண்டங்கள் கந்தரோடைக்கு இறக்குமதி செய்யப் பட்டிருக்கலாம் எனவும் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களே வரலாற்றுக் காலத்தையும் வளர்த்தெடுத்தனர் என்றும் குறிப்பிடுகிறார். எனவே கந்தரோடை உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட ஒரு தளமாகி, நகராக்க மையமாகி யாழ்ப்பாணப் பண்பாட்டு உருவாக்கத்தின் பிரதான ஊற்றாக இருந்ததைக் காணலாம்.

பல வெளிநாட்டு நாணயங்கள் விமலாபேக்லே, கலாநிதி ரகுபதி, போரசியர் கிருஷ்ணராஜா, பேராசிரியர் புஸ்பரத்தினம் போன்றோரால் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



மௌரிய அரசு காலத்திலும், சற்றுப் பிற்பட்ட காலத்திலும் ஆந்திராவில் ஆட்சிபுரிந்த சாதவாகன அரசும், தமிழகத்தில் ஆட்சி புரிந்த சங்ககால பாண்டிய, சேர வம்சங்களும் வெளியிட்ட நாணயங்கள் கந்தரோடையில் கிடைத்திருப்பது தென்னிந்திய வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்பைக் காட்டுகின்றது. மேலும் இங்கு பெருங்கற்காலத்திற்கேயுரிய கறுப்பு - சிகப்பு மட்பாண்டங்களுடன் உரோம மட்பாண்டங்களும், நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொதுவாக இலங்கையில் மகாகம, மாதோட்டம், அனுராதபுரம் போன்ற இடங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரவலோடு நகரமயமாக்கலுக்கு உட்பட்டது போன்று கந்தரோடையும் வட இலங்கையின் புராதன தலைநகரங்களில் ஒன்றாக, சிறப்பாக யாழ்ப்பாணத்தின் தலைமையிடமாக மாறியதை கலாநிதி ரகுபதி எடுத்துக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. கந்தரோடையின் நகரமயமாக்கலுக்கு ஜம்புகோளப்பட்டினம், காயாத்துறைக் மூலமான கடல் வர்த்தக பண்பாட்டுத் தொடர்புகள் காரணமாக இருந்திருக்கலாமென கலாநிதி தியாகராஜா எடுத்துக் காட்டுகின்றார். இப்பின்னணியில் மாதோட்டத்திற்கு அடுத்த நிலையிலே கந்தரோடையின் பண்பாடுருவாக்கத்திற்கு வழியமைந்ததாகக் கருதப்படுகின்றது. உள்நாட்டிலே பூநகரி, அநுராதபுரம் போன்றவற்றுடன் தொடர்புபட்டும், சிறப்பாக மாந்தையுடன் ஏற்பட்ட வெளிநாட்டுத் தொடர்புகளைத் தானும் உள்வாங்கியும் இருந்தமை இங்கு பல்லின, மத, பண்பாடு கொண்ட மக்களின் தொடர்புகள் ஏற்பட வழிவகுத்தது.

அன்றாடம் பயன்படுத்திய பொருட்களோடு அவர்கள் பயன்படுத்திய மண்பாண்டங்கள் மற்றும் மீன், இறைச்சிகளது எலும்பெச்சங்கள், நாணயங்கள், அம்மி, குழவிகள், இரும்பாலான மீன் கொழுக்கிகள், இரும்பாலான கருவிகள், அக்கால கை வளையல்கள், மணிவகைகள் முதலானவையும் பண்பாட்டு வாழ்வினை உறுதிப்படுத்தி நிற்பனவையாகும். கந்தரோடை அகழ்வாய்வுகளிலே உமிப்படிவுபெற்றுக் கொள்ளப்பட்டமை, எருதின் எலும்புகள், இங்கு நிலையான பொருளாதார நடவடிக்கைகளில் நெற்செய்கை முக்கிய இடம்பிடித்தமையை வெளிப்படுத்தி நிற்கின்றது. கந்தரோடைய வயற்பரப்புகளோடு ஒட்டிய வகையிலே குளங்கள் பல அமையப்பெற்றுள்ளதை இன்றுங் காணலாம். நீர்ப்பாசனம் மூலமான நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு இவை ஏதுவாக அமைந்திருந்தன.

ஆதித்திராவிட குடியிருப்புக்களின் குறிகாட்டிகள் எனச் சிறப்பிக்கப்படும் அளவுக்கு வேறும் பல தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. பிராமி எழுத்துக்களைக் 'ழ' வரி வடிவ, 'ஏ' கார வரிவடிவ எழுத்து பொறித்த மட்பாண்டத்துண்டுகள் முக்கியம் பெறுகிறன. மேலும் 'கோவேத' என்னும் வாசகம் பொறித்த முத்திரை கிடைக்கப்பெற்ற ஆனைக்கோட்டை மையமும் கந்தரோடையுடன் இணைத்தே பார்க்கப்படுவது கவனிக்கத்தக்கதாகும். கந்தரோடையிலே கிடைத்தவற்றுள் கலைவடிவத்திற்குரிய சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. பல தரப்பட்ட சித்திரவேலைப்பாடுகளும், வர்ணம் தீட்டும் முறைகளும் காணப்பட்டதனை இங்கு கிடைத்த மட்பாண்டங்கள் உறுதி செய்கின்றன. மேலும் இங்கு கிடைத்த கிண்ணங்கள், வட்டில்கள் பல்வேறு வரைபுகளுடன் கூடிய சட்டிகள், அச்சுப்பதியும் முறைகள் என்பனவும் சமகால கலை வெளிப்பாட்டினையே சுட்டிக்காட்டுகின்றன.

பெருங்கற்கால மண்படை அடுக்கினுள் மீட்கப்பட்ட செங்கட்டி ஒன்றுடன் செருகப்பட்டிருந்த 3 வெள்ளி நாகத்தலை நாணயமும் மேற்படையில் வேறொரு நாணயமும்



முக்கியத்துவம் பெறுகின்றன. நாணயங்களோடு இணைந்ததாக தமிழ்ப் பிராமி எழுத்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நான்கு நாணயங்களிலும் சங்கு சக்கரத்துடன் நாகத்தலை ஒன்று பொறிக்கப்பட்டிருக்கின்றது. நாணயமொன்றிலே முன்பக்கத்தில் நாகர் வரிவடிவமும் நாகர்பட்டமும் பொறிக்கப்பட்டிருப்பதோடு எகிப்திய முறையைத் தழுவிய வரிவடிவமாகவும் அமையப்பெற்றுள்ளது. கந்தரோடை, கேரளம், மத்திய தரை கடல் தொடர்புகளை உறுதிப்படுத்தும் இந்நாணயம் கந்ரோடையில் பெருங்கற்காலப் பண்பாட்டின் வளர்ச்சியின் தொடக்கத்திலிருந்தே நாகர்கள் எழுச்சி பெற்று வந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தும். இவர்களே இலங்கையின் ஆதிகாலத் திராவிடப் பண்பாட்டின் கர்த்தாக்கள் என்பதைப் பேராசிரியர் கிருஷ்ணராஜா, பேராசிரியர் புஸ்பரத்தினம் போன்றார் ஆய்வுகள் மூலம் வலியுறித்தியதைக் காணலாம்.

கந்தரோடையைச் சுற்றியுள்ள குறிச்சிகளிலே சங்கம்புலவு, தில்லையங்கூடல், கயல் கண்ணி, அங்கன் அம்மைக் கடவை, உச்சாப் பனை, பருத்தியாவோடை, திருப்புதுறை ஆகியன முக்கியம் பெறுகின்றன. பழமைவாய்ந்த ஈம அடக்க முறையைக் கொண்டுள்ள சங்கமபுலவில் கிடைத்த மஞ்சள் நிறக் கலவையினாலான நாகலிங்கமானது திருக்காம்பலிச்யூர் மற்றும் குடிமலை லிங்கத்துடன் ஒற்றுமைப்படுவது ஆய்வுக்குரிய அம்சமாகும். இதனைச் சூழவுள்ள நிலப்பகுதி வயற்பரப்பாகவும் தொல்பொருட்கள் கிடைத்து வரும் மையமாகவும் உள்ளது. கயல்கண்ணி குறிச்சியானது கந்ரோடையில் வட்டவடிவமானதும் சதுரவடிவமானதுமான பழமைவாய்ந்த கட்டக் கூறுகளைக் கொண்டு விளங்குகிறது. அங்கன் அம்மன் கடவை, சேரன் செங்கட்டுவன் எடுத்த கண்ணகி விழாவுக்குச் சென்று மீண்ட கஜபாகு கண்ணகிக்குரிய முதல் ஆலயத்தை இங்கு எடுத்ததாக ஐதீகம் உண்டு.

கந்தரோடையில் தமிழ் பௌத்தத்தின் செல்வாக்கினை அடையாளம் காணமுடிகின்றது. தற்காலத்தில் நோக்கப்படுவது போன்று அக்காலத்தில் பௌத்தம் ஒரு இனத்தின் சமயமாக இருக்கவில்லையெனத் தெரிகின்றது. அதாவது தமிழ்நாட்டில் தமிழ் பௌத்தம் சிறப்புற்றிருந்தது போன்று யாழ்ப்பாணத்திலும் இருந்துள்ளதுமன்றி தமிழர்கள் பௌத்தர்களாகவும் இருந்துள்ளனரெனலாம். நாகதீபம் அதனுடன் மணிமேகலா தெய்வத்தின் தொடர்பு ஆகியன தமிழ்பௌத்தின் செல்வாக்கினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. இக்காலத்தில் அரசியல், பொருளாதாரம் (விவசாயம், வர்த்தகம்) இரும்பின் பயன்பாடு, சமயம், கலை, மொழி, தொழினுட்பம், வாழ்வியல் முறைகள் போன்ற இன்னோரன்ன பண்பாட்டின் கூறுகள் தோற்றம் பெற்று யாழ்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கும் பரவலடைந்தது. எனவேதான் யாழ்ப்பாணப் பண்பாட்டு உருவாக்கத்தில் கந்தரோடை முக்கிய மையமாக இருந்ததெனக் கூறப்படுகின்றது.

**சாந்தினி அருளானந்தம்**
**விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

